## பிப்ரவரி - 20

**"உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும்."**

**- யாக் 1 : 26**

நாவு இருதயத்தின் சுட்டுக்கோலாக இருக்கிறது. ஏனெனில், "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்." ஆகையால், தன்னயமாய், பொறாமையாய், கசப்பாய், பெருமையாய் அவதூறாய் பேசும் அடக்கப்படாத நாவு, இவைகளை வழிந்தோடச் செய்யும். இருதயம் பரிசுத்தமாக்கப்படாததாயும், பரிசுத்தமில்லாததாயும், கிறிஸ்துவின் ஆவியால் வருந்தத் தக்கவிதமாகக் குறைவுள்ளதாயும் இருக்கிறதென்பதை நிரூபிக்கிறது. ஆகவே எதுவாகிலும் தேவபக்தியை அந்த இருதயம் பெற்றிருந்தாலும் அவ்வளவும் வீணாயிற்று. ஏனெனில் அந்த இருதயம் இரட்சிக்கப்படவில்லை. அது காப்பாற்றக்கூடிய நிலையிலும் இல்லை. ஆனால் அந்த நல்ல வைத்தியன் ஆத்தும விஷத்திற்கு மாற்று மருந்தைக் காண்பித்திருக்கிறார். அந்த மருந்துக்களை கற்பித்தபடி தகுந்த விதமாக உட்கொண்டால், அவை கசப்பான இருதயத்தை இன்பகரமாக்கும். **– Z ’99, 215 (R 2517).**

நாவை அடக்குவது என்றால், அதைக் கட்டுப்படுத்தி நடத்துவது என்று அர்த்தம். தீய காரியங்களைப் பேசுவதிலிருந்து நாவைக் கட்டுப்படுத்துவதும், நல்ல விஷயங்களைப் பேசுவதற்கு அதை நடத்துவதும் நாவை அடக்குவதின் ஒரு பாகமாக இருக்கிறது. யார் தனது நாவை சீரழிந்த குணத்தின் கருவியாவதற்கு இடங்கொடுக்கிறானோ, அவன் தேவனுக்கும் மனிதனுக்கும் காட்டும் அன்பை மூலதத்துவமாகக் கொண்ட உண்மையான தேவபக்தியுள்ள குணத்தையுடைய மனிதனல்ல, அது கடிந்து பேசும் யாவருக்கும் தீங்கிழைக்கும் என்பதை சிந்திக்கும்போது, இப்படிப்பட்ட நாவு அன்பின் பிரமாணத்தை மீறுகிறது என்று தெரிகிறது. ஆகையால், நமது நாவுகளை தீமை செய்வதற்குத் தப்பி ஒடாதவாறு வைத்துக்கொண்டு, அவைகளை சரியாகப் பேசுவதற்கு நடத்தி, அவைகளைக் கட்டுப்படுத்துவோமாக! **- P ’30, 14.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யாக் 3:1-12; சங் 18:21; 12:3; 34:13; 39:1; 140:3; நீதி 16:27; மத் 15:18, 19; அப் 5:3; 2தீமோ 2:23-25; மத் 6:5-9; 23:14-22,27; பிர 5:2; யாக் 1:27;

**கோபுர வாசிப்பு : Z ’14, 245 (R 5517).**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் என் நாவை எப்படி உபயோகித்தேன்? அதில் உதவியாக இருந்ததும் இடையூறாக இருந்ததும் என்ன? அதன் விளைவு என்ன?